# யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## முதலாம் தவணைப் பரீட்சை - 2016

## சைவநெறி

2286

**தரம்: 06**

சுட்டெண் :.........................................

**நேரம்: 2.00 மணித்தியாலம்**

### பகுதி - I

❖ **மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01) ஓம் என்னும் பிரணவ மந்திரப் பொருளாய் விளங்குபவர்

1) அம்பாள் 2) சிவபெருமான் 3) விநாயகர் 4) வைரவர்

02) வெற்றி வேற்கை என்னும் நூலை இயற்றியவர்

1) ஔவையார் 2) அதிவீரராம பாண்டியன் 3) திருவள்ளுவர் 4) கபிலதேவநாயனார்

03) விநாயகப் பெருமானுடைய வாகனம்

1) மயில் 2) சிங்கம் 3) நாய் 4) பெருச்சாளி

04) உலகத்தின் கருத்தாவாக விளங்குபவர்.

1) சிவபெருமான் 2) சக்தி 3) முருகன் 4) விநாயகர்

05) உணவு உண்ணத் தொடங்குமுன் பாடப்படும் தேவாரம்.

1) "மந்திரமாவது நீறு..." 2) "அன்னம் பாலிக்கும்...."

3. "பாலுக்குப் பாலகன்...." 4) "பூவினுக்கருங்கலம்...."

06) இறைவன் உறைந்திருக்கும் இடம்

1) வீடு 2) பாடசாலை 3) ஆலயம் 4) சமய நிறுவனங்கள்

07) தேவர்களின் அரசன்.

1) தேவேந்திரன் 2) சிபிச்சக்கர வர்த்தி 3) மனுநீதி கண்ட சோழன் 4) கோவலன்

08) "கர்ணவேதனம்" என அழைக்கப்படும் சடங்கு.

1) பெயர் சூட்டுதல் 2) ஏடு தொடக்கல் 3) காது குத்துதல் 4) சோறூட்டல்

09) "[illegible] செய விரும்பு" எனக் கூறியவர்.

1) [illegible]வையார் 2) கம்பர் 3) வியாசர் 4) திருவள்ளுவர்

10) "கேதார கௌரி" விரதத்திற்குரிய கடவுள்.

1) பிள்ளையார் 2) சிவபெருமான் 3) உமாதேவியார் 4) முருகன்

11) பஞ்சபுராணம் பாடும்போது இரண்டாவதாகப் ஓதப்படுவது.

1) தேவாரம் 2) பெரியபுராணம் 3) திருவாசகம் 4) திருவிசைப்பா

12) "தாண்டக வேந்தர்" என அழைக்கப்படுபவர்.

1) திருஞான சம்பந்தர் 2) திருநாவுக்கரசர்

3) சுந்தரமூர்த்தி நாயனார் 4) மாணிக்க வாசகர்

13) தீபாவளிப் பண்டிகைகளுடன் தொடர்புடைய அரசன்.

1) கஜமுகாசுரன் 2) சிங்காசுரன் 3) மகுடாசுரன் 4) நரகாசுரன்

14) சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் முகமாகக் கொண்டாடப்படும் பண்டிகை.

1) தைப்பொங்கல் 2) புதுவருடப்பிறப்பு 3) தீபாவளி 4) ஆடிப்பிறப்பு



kalvi.lk

15) பெரியோர் முன்னிலையில் செய்யத்தக்க செயல்.

1) பணிவாகப்பேசுதல் 2) உயர்ந்த ஆசனத்தில் இருத்தல்

3) கால் நீட்டிக் கொண்டிருத்தல் 4) கைசுட்டிப் பேசுதல்

16) திருநீறு அணியும் போது சொல்ல வேண்டியது.

1) நமசிவாய 2) சிவாயநம 3) திருச்சிற்றம்பலம் 4) சிவசிவ

17) மருத்துநீர் வைத்து நீராடும் பண்டிகை

1) தைப்பொங்கல் 2) தீபாவளி 3) சித்திரை வருடப்பிறப்பு 4) ஆடிப்பிறப்பு

18) "இடரினுந் தளரினும்....." எனும் தேவாரம் பாடப்பட்ட தலம்.

1) திருவாவடு துறை 2) சீர்காழி 3) தில்லை 4) திருவெண்ணெய் நல்லூர்

19) வீட்டில் நாம் அன்றாடம் கடைப்பிடிக்கும் சைவப்பழக்கம் அல்லாதது.

1) கடவுளை வணங்குதல் 2) திருநீறு அணிதல்

3) பஞ்சபுராணம் ஓதுதல் 4) உணவு உண்ணல்

20) "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்." எனக் கூறும் நூல்.

1) நல்வழி 2) மூதுரை 3) ஆத்திசூடி 4) திருக்குறள்

(20x2 = 40புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**(01) பின்வரும் தேவாரப் பாடல்கள் இரண்டினையும் பிழையின்றி எழுதி, அவற்றைப் பாடியவர் பெயர்களையும் எழுதுக.**

1. "இடரினுந் தளரினும்......."
2. "ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே....."

(8+2x2=20 புள்ளிகள்)

**(02) விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்."**

1. விநாயகர் என்பதன் பொருள் யாது?
2. விநாயகருக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் நான்கு எழுதுக.
3. விநாயகர் வழிபாடு இடம்பெறும் இடங்கள் ஐந்து எழுதுக.
4. விநாயகரை வழிபடுவதனால் கிடைக்கும் பயன்களைக் குறிப்பிடுக.

(2+2+3+3=10 புள்ளிகள்)

**(03) "விழுமியங்களைப் பேணி வாழ்வில் உயர்வோம்"**

1. நீங்கள் அன்றாடம் கடைப்பிடிக்கும் சமயப் பழக்கவழக்கங்கள் மூன்று எழுதுக.
2. பஞ்சபுராணம் பாடவேண்டிய ஒழுங்கு முறையைக் குறிப்பிடுக.
3. சமய விழுமியப் பண்புகள் நான்கு எழுதுக.
4. திருவிளக்கேற்றுவதற்கு பயன்படுத்தக் கூடிய எண்ணெய் வகைகள் மூன்று எழுதுக.

(2+2+3+3=10 புள்ளிகள்)

(04) **“சைவவாழ்வில் சடங்குகள், சம்பிரதாயங்கள் பேணப்பட வேண்டும்.”**

1. வாழ்வியற் சடங்குகள் மூன்றின் பெயர்களைத் தருக.
2. வாழ்வியற் சடங்குகளை மேற்கொள்வதன் நோக்கம் யாது.
3. சோறூட்டற் சடங்கிற்கு வழங்கப்படும் வேறு பெயரைக் குறிப்பிடுக.
   யாரால் குழந்தைகளுக்கு சோறூட்டப்படும்.
4. காது குத்தல் சடங்கின் நோக்கத்தினை குறிப்பிடுக.

(2+2+3+3=10 புள்ளிகள்)

(05) **“விரதங்கள் சமய வாழ்வுக்கு வழிகாட்டுகின்றன.”**

1. விரதம் என்பதற்கு நாவலர் கூறும் கருத்தினை எழுதுக.
2. சிவ விரதங்கள் இரண்டு சக்திக்குரிய விரதங்கள் இரண்டு எழுதுக.
3. நீர் அனுட்டித்த விரதங்களைக் குறிபிப்பிட்டு, அதில் ஒன்றினை அனுட்டித்த முறையினையும் குறிப்பிடுக.
4. விரதம் அனுட்டிப்பதால் ஏற்படும் நன்மைகளைக் குறிப்பிடுக.

(2+2+3+3=10 புள்ளிகள்)

(06) **“வீட்டில் சைவப் பழக்கவழக்கங்களைப் பேணுவோம்.”**

1. நீர் வீட்டில் அன்றாடம் கடைப்பிடிக்கும் சைவப் பழக்கவழக்கங்களை எழுதுக.
2. நீர் விசேட தினங்களில் பின்பற்றுகின்ற சைவப்பழக்கவழக்கங்களை எழுதுக.
3. விசேட தினங்கள் மூன்று தருக.
4. நீர் வீட்டில் சைவப் பழக்கவழங்கங்களைப் பின்புற்றுவதால் பெற்றுக் கொள்ளும் நன்மைகளைக் குறிப்பிடுக.

(3+3+2+2=10புள்ளிகள்)

(07) **பின்வருவனவற்றுள் இரண்டு பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**

1. தைப்பொங்கல்
2. பெரியோரைக் கனம் பண்ணுதல்.
3. ஏடுதொடக்குதல்
4. சைவ இல்லம்
5. விநாயகர் வழிபாடு

(5x2=20புள்ளிகள்)

kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

### மாதக் கட்டணம்

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page